**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண்.95/2022**

2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியாகிய அன்பழகன்.PW.2 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 20.06.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அன்பழகன் | | | |
| Father Name | : | கண்ணையன் | Court | : | |
| Village | : | புத்தகரம், சங்கரன்பந்தல். | Taluk | : | |
| Calling | : | | Religion | : | |
| Age | : | 49 | | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். நான் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தேதி நினைவில் இல்லை வெங்கடாசலம் என்பவர் தனது சிறிய தந்தையின் மகனான ராமகிருஷ்ணனுக்கு உயில் எழுதிவைத்தார். வெங்கடாசலம் உயில் எழுதி வைத்தபோது நான் அவருடன் தான் இருந்தேன். வெங்கடாசலம் மேற்படி உயிலில் கைரேகை வைத்தபோது நான் அங்கு தான் இருந்தேன். வெங்கடாசலம் என்னை சாட்சி கையொப்பம் செய்ய சொல்லி கூறினார். அதனால் வெங்கடாசலம் எழுதிவைத்த உயில் சாசனத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் உயில் சாசனமான வா.சா.ஆ.2 ல் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **வா.சா.ஆ..5** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. என்னுடன் கோவிந்தராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்ததை வெங்கடாசலம் பார்த்தார். உயிலின் யாரிடம் சான்றொப்பம் பெற்றார்கள் என்றால் நோட்டரி பப்ளிக் வழக்கறிஞர் திரு. ஆர்.சேகர். அவர்களிடம் பெற்றார்கள்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

வெங்கடாசலம் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் பெரியப்பா உறவுமுறையாவார். வெங்கடாசலம் எழுதிவைத்த உயிலில் யாருக்கு அவருடைய சொத்துக்கள் கிடைக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அவரது தம்பியான ராமகிருஷ்ணன் என்பவருக்கு சொத்துக்களை எழுதிவைத்துள்ளார். உயிலானது எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் வெங்கடாசலம் என்பவரது வீட்டில் தான் எழுதப்பட்டது. உயில் எழுதும்போது யார், யார் அங்கு இருந்தார்கள் என்றால் கோவிந்தராஜ். அன்பழகன். ராமகிருஷ்ணன், வெங்கடாசலம் மனைவி கஸ்தூரி மற்றும் வெங்கடாசலம் ஆகியோர்கள் இருந்தார்கள். வெங்கடாசலம் கையெழுத்து போடும் பழக்கம் உள்ளவரா அல்லது கைரேகை வைக்கும் பழக்கம் உள்ளவரா என்றால் பெரும்பாலும் கையெழுத்துதான் போடுவார். உயில் எழுதியபோது அவரது கை நடுக்கம் ஏற்பட்டதால் கைரேகை வைத்தார். உயிலில் வெங்கடாசலம் இடது பெருரேகை வைத்ததாக எழுதிய நபர் யார் என்றால் தற்போது நினைவில் இல்லை. உயில் எழுதிவைத்தபோது வெங்கடாசலம் சுயநினைவுடன் இருந்தாரா என்றால் ஆமாம். உயிலில் உள்ள விபரங்களை புரிந்துதான் வெங்கடாசலம் கைரேகை வைத்தாரா என்றால் ஆமாம். வெங்கடாசலம் கைரேகை வைத்ததை நானும், முதல் சாட்சியான கோவிந்தராஜ் என்பவரும் பார்த்தோம்.